*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 97/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 (LW-1)***

*Name / Father's Name:* ***திருமதி.ஆர்த்தி க/பெ. பிரேம்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **03.03.2026.**

துவக்க நேரம் 05.45 A.N

**எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கோனேரிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எதிரி, எனது கணவர் ஆவார். கடந்த 27.06.2024 அன்று மாலை 07.00 மணியளவில் எனது கணவர் வீட்டில், நான் இருந்தபொழுது எனது கணவர் குடித்துவிட்டு வீட்டிற்கு வந்தார். அதை நான் கேட்டதால், எங்கள் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு, எனது அம்மா, அப்பாவை இழுத்து தேவடியா மவளே, கண்டாரஓலி என்று என்னை கெட்டவார்த்தையால் திட்டி, எனது முடியை பிடித்து இழுத்து, என்னை தெருவிற்கு இழுத்துவந்து, எனது மார்பில் எட்டி உதைத்து, வீதி முழுதும் என்னை அடித்து துறத்திக்கொண்டே வந்தார்.

2) மேலும் நீ உன் அம்மா வீட்டிற்கே சென்றுவிடு, இல்லையென்றால் நான், உன்னை அடித்து கொன்று புதைத்துவிடுவேன் என்று எனது கணவர் சொன்னார். மேலும் என்னை அடிப்பதை பார்த்த நபர்கள், இது குறித்து எனது பெற்றோருக்கு தகவல் தெரிவித்ததன் பேரில் அவர்கள் வந்ததை பார்த்ததும், எனது கணவர் அந்த இடத்திலிருந்து சென்றுவிட்டார். மேலும் எனது 7 மாத கைக்குழந்தையை பிடுங்கிக்கொண்டுதான் என்னை துறத்திவிட்டார். எனக்கு

வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லாததால், நான், மருத்துவமனையில் தங்கி சிகிச்சை எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை. அருகில் உள்ள மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன்.

3) மேற்படி சம்பவம் குறித்து, ஆத்தூர், அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகாரின் பேரில், போலிசார், எனது கணவரை அழைத்தார்கள். எனது கணவர் விசாரணைக்கு வரவில்லை. அதனால் 11 நாட்கள் கழித்து தம்மம்பட்டி காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 05.51 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.03.03 18:10:59 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 97/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-2)***

*Name / Father's Name:* ***திரு.ஸ்டீபன்ராஜ் த/பெ. ராயப்பன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **03.03.2026.**

துவக்க நேரம் 05.52 A.N

**எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கோனேரிப்பட்டியில் குடியிருந்து, டிரைவராக வேலை செய்து வருகிறேன். சாட்சி ஆர்த்தி, எனது மகள் ஆவார். எதிரி பிரேம், எனது மருமகன் ஆவார். கடந்த 27.06.2024 அன்று மாலை 07.00 மணியளவில் நான் ஒருவேலையாக சென்றுகொண்டிருந்தேன். அப்பொழுது எனது மகள் ஆர்த்தியை, எனது மருமகன் ரோட்டில் அடித்து, துறத்திக்கொண்டே வருவதாக ரோட்டில் வந்தவர்கள், என்னிடம் சொன்னார்கள்.

2) நானும், எனது மனைவியும் சென்று எனது மருமகனை விசாரித்தோம். அதற்கு எனது எனது மருமகன், எனக்கு முன்பாக எனது மகளை தேவடியா புள்ளையே என்றும், வாய்கூசும் அளவிற்கு கெட்ட வார்த்தையால் பேசி, உனக்கு என்ன போட்டாங்க, என்று சொல்லி, எனது மகளின் தலைமுடியை பிடித்து இழுத்து, எனது மகளின் மார்பக பகுதியில் எட்டி உதைத்துக்கொண்டிருந்ததால்தான் நானும் விலக்கிவிடசென்றேன்.

3) விலக்கிவிட சென்ற என்னை, குடும்பத்துடன் உங்களை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். எனது மகளுக்கு வெளிப்புற காயம்

எதுவும் இல்லாததால், அங்கேயே தனியார் மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார். அதன் பிறகுதான் ஆத்தூர், அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எனது மகள் புகார் கொடுத்தார். எனது மருமகனை விசாரணைக்காக அழைத்தும், எனது மருமகன் ஆஜராகாததால், எனது மகள் தம்மம்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 06.00 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.03.03 18:11:10 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 97/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-3 (LW-3)***

*Name / Father's Name:* ***திருமதி.சீலா க/பெ. ஸ்டீபன்ராஜ்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **03.03.2026.**

துவக்க நேரம் 06.01 A.N

**எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கோனேரிப்பட்டியில் குடியிருந்து, பலகார வியாபாரம் செய்து வருகிறேன். சாட்சி ஆர்த்தி, எனது மகள் ஆவார். சாட்சி ஸ்டீபன்ராஜ், எனது கணவர் ஆவார். எதிரி பிரேம், எனது மருமகன் ஆவார். கடந்த 27.06.2024 அன்று மாலை 07.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபொழுது எனது மகள் ஆர்த்தியை, எனது மருமகன் ரோட்டில் அடித்து, துறத்திக்கொண்டே வருவதாகவும், எனது மகள் அடிவாங்குவதை பார்த்த நபர்கள் என்னிடம் வந்து சொன்னார்கள்.

2) நானும், எனது கணவரும் சென்று எனது மருமகனை விசாரித்தோம். அதற்கு எனது மருமகன், எங்களுக்கு முன்பாக எனது மகளை தேவடியா புள்ளையே என்றும், வாய்கூசும் அளவிற்கு கெட்ட வார்த்தையால் பேசி, உனக்கு என்ன போட்டாங்க, என்று சொல்லி, எனது மகளின் தலைமுடியை பிடித்து இழுத்து, எனது மகளின் மார்பக பகுதியில் எட்டி உதைத்துக்கொண்டிருந்ததால் ஏன்டா என் மகளை இப்படி வீதியில போட்டு அடிச்சி கொடுமைபடுத்துற, எல்லாரும் பார்க்குறாங்களே என்று கேட்டதற்கு என் பொண்டாட்டியை நான்

அடித்து கொடுமைபடுத்துவண்டி நீங்க போங்கடி என்று சொல்லி கெட்ட வார்த்தையால் திட்டிவிட்டு, அங்கிருந்து சென்றுவிட்டார். மேலும் எனது மகளின் தலையில் பின்பகுதியில், எனது மருமகன் செருப்பால் அடித்ததால், தலை வீக்கமாக இருந்தது.

3) எனது மகளுக்கு வெளிப்புற காயம் எதுவும் இல்லாததால், அங்கேயே தனியார் மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார். அதன் பிறகுதான் ஆத்துார், அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எனது மகள் புகார் கொடுத்தார். எனது மருமகனை விசாரணைக்காக அழைத்தும், எனது மருமகன் ஆஜராகாததால், எனது மகள் தம்மம்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 06.07 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.03.03 18:11:19 +0530

Judicial Magistrate No.2, Attur.